**செய்தி வெளியீடு எண் : 261** **நாள் : 08.02.2023**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பூமாலை வணிக வளாகத்தில் நரிக்குறவர் சுயஉதவிக் குழுப் பெண்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை மையத்தை குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்கள்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (08.02.2023) காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் பூமாலை வணிக வளாகத்தில் நரிக்குறவர் சுயஉதவிக் குழுப் பெண்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை மையத்தை குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, நரிக்குறவர் சுயஉதவிக் குழுப் பெண்கள் உற்பத்தி செய்த பொருட்களைப் பார்வையிட்டு, அவர்களுடன் கலந்துரையாடினார்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், நெமிலி ஊராட்சியில் உள்ள நரிக்குறவர் இன மக்களின் வாழ்வாதாரம் சிறக்க நரிக்குறவர் இன சுயஉதவிக் குழுக்களுக்கு நபார்டு வங்கி மற்றும் ரீட்ஸ் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் பட்டு நூலினால் ஆன ஆபரணங்கள் தயாரிப்பதற்காக 30 நரிக்குறவர் இன சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இவர்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய பேருந்து நிலையத்திலுள்ள வணிக வளாகக் கடை எண்.2 ஒதுக்கீடு செய்யப்பட்டு, SIDBI மற்றும் CSR நிதிலிருந்து ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் உட்புற அழகுபடுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்திலுள்ள பட்டு சேலை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் நரிக்குறவர்கள் உற்பத்தி செய்யும் ஆபரணங்களை கொள்முதல் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர். கூட்டுறவுத்துறையின் மூலமாகவும், துணிநூல் (ம) கைத்தறி அலுவலகம் மூலமாகவும் கழிவு பட்டு நூல்களை நரிக்குறவர்களுக்கு இலவசமாக வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், வெளி மாநிலங்கள் மற்றும் வேறு மாவட்டங்களில் நடைபெறும் சாராஸ் கண்காட்சிகளில் நரிக்குறவர்கள் உற்பத்தி செய்யும் ஆபரணங்களை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நரிக்குறவர்களின் வாழ்வாதாரம் சிறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நரிக்குறவர் சுயஉதவிக் குழுப் பெண்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை மையத்தை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு

மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இன்று குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்கள்.

**முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிப்ரவரி 8 முதல் 28–ஆம் தேதி வரை நடைபெற உள்ள முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை காஞ்சிபுரம் மீனாட்சி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இன்று (08.02.2023)தொடங்கி வைத்தார்.

இந்த விளையாட்டுப் போட்டிகள் 5 பிரிவுகளில் நடைபெற உள்ளது. இதில் சிலம்பம், கபடி, கையுந்து பந்து (Volley ball), ஹாக்கி, கால்பந்து உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்நிகழ்ச்சிகளில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் அவர்கள், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. க. செல்வம் அவர்கள், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. வி. எம். பி. எழிலரசன் அவர்கள், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம். மகாலட்சுமி யுவராஜ் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா. ஆர்த்தி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in